281

ஓம் குஹாயநம :

திருப்புகழமிர்தம்

"திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ஞன்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 18 | விஜய ஆண்டு மாசித் திங்கள் பிப்ரவரி-1954 | இதழ் 11

திருப்புகழ்

பொது

சூதினுண வாசைதனி லேசுழலு மீனதென
 தூசுவழ கானவடி வதனாலே-
சூதமுட னேருமென மாதர்நகை தேடுபொரு
 ளாசைதமி லேசுழல வருகாலன்;

ஆதிவிதி யோடுபிற ழாதவகை தேடியென
 தாவிதனை யேகுறுகி வருபோது-
ஆதிமுரு காதிமுரு காதிமுரு காயெனவு
 மாதிமுரு காநினைவு தருவாயே;

ஓதமுகி லாடுகிரி யேறுபட வாழசுரர்
 ஓலமிட வேயயில்கொ டமராடி-
ஓநமசி வாயகுரு பாதமதி லேபணியும்
 யோகமயி லாவமலை மகிழ்பாலா;

நாதரகு ராம அரி மாயன்மரு காபுவன
 நாடுமடி யார்கள்மன துறைவோனே-
ஞானகுற வானைகண வாமுருக னேயமரர்
 நாடுபெற வாழவருள் பெருமாளே.

——:——

பதவுரை

ஓதமுகில் ஆடு கிரி யேறுபட - கடல்நீரை முகந்த மேகம் தவழ்கின்ற (கிரவுஞ்ச) மலை இடிபடவும், வாழ் அசுரர் ஓலம் இட - நெடுங்காலமாக வாழ்ந்த அரக்கர்கள் ஓ என்று கதறும்படியும், அயில்கொடு அமர் ஆடி - வேலாயுதத்தைத் திருக்கரத்தில் கொண்டு போர் செய்து வென்று, ஓம் நமசிவாய குரு - ஓம் நமசிவாய என்ற பஞ்சாக்கரப் பொருளாகிய பரமேசுரனுடைய, பாதம் அதிலே பணியும் - திருவடியிலே தொழுத, யோக மயிலா - யோகநிலையைக் கூட்டுவிக்கின்ற மயிலை வாகனமாக வுடையவரே! அமலை மகிழ்பாலா - உமாதேவியார் மகிழ்ந்து பெற்ற திருக்குமாரரே! நாதரகுராம - உலகங்கட்குத் தலைவரும், ரகுகுலத்தில் வந்த ராமரும், அரி - பாவத்தைப் போக்குபவரும், மாயன் - மாயையில் வல்லவருமாகிய நாராயணருடைய, மருகா - திருமருகரே! புவனம் நாடும் அடியார்கள் மனது உறைவோனே - உலகம் மதித்து எண்ணுகின்ற அடியவர்களுடைய உள்ளத்தில் உறைகின்றவரே! ஞான குற ஆனை கணவா - ஞானமே ஒரு வடிவாகக் குறவர் குலத்தில் வந்த பெண்யானை போன்ற வள்ளியம்மையாரது கணவரே! முருகனே - முருகப்பெருமானே! அமரர் நாடு பெற வாழ அருள் - தேவர்கள் தங்கள் பொன்னுட்டைப் பெறவும் பெற்று அதில் நிலைபேருக வாழவும் அருள்புரிந்த, பெருமாளே - பெருமைமிகுந்தவரே! சூதின் உணவு ஆசை தனிலே - சூதாக அமைக்கும் உணவின் மீது வைத்த ஆசையினாலே, சுழலும் மீனது என - இங்கும் அங்குமாக ஓயாது அலைகின்ற மீனைப்போலே, தூசு அழகு ஆன வடிவு அதனாலே - ஆடையினால் அழகு செய்து நல்ல வுருவத்துடன் இருப்பதனால், சூதம் உடல் நேரும் என - அவர்கள் உடம்பு மாந்தளிரை நிகர்க்கும் என்று கூறி, மாதர் நசை - பெண்கள் மீது வைத்த ஆசை இவைகளில் அடியேன் உழன்றுகொண்டு இருக்கும் போது, வருகாலன் - முடிவில் வரக்கூடிய் காலன் என்பவன், ஆதி விதியோடு - ஆதியிலேயே விதித்தவிதியின்படி, பிறழாதவகை தேடி - அதில்மாறுபடாத வண்ணம் என்னைத் தேடிக்கொண்டுவந்து, எனது ஆவிதனையே குறுகி வருபோது - அடியேனுடைய உயிரைப் பற்ற நெருங்கிவரும்போது, ஆதி முருகா! ஆதி முருகா! ஆதி முருகா எனவும் - ஆதி முருகா! என்று உமது திருநாமத்தைக் கூறித் துதிக்க, ஆதி முருகா நினைவு - முதற் பொருளாகிய முருகக் கடவுளே! நல்ல நினைவை, தருவாயே - அடியேனுக்குத் தந்தருள்வீர்.

பொழிப்புரை

கடல்நீரை முகந்த மேகந் தவழ்கின்ற உயர்ந்த கிரவுஞ்ச மலை யிடிபடவும், பலகாலமாக வாழ்ந்த அசுரர்கள் ஓலமிட்டு மடியவும், வேலாயுதத்தைக்கொண்டு போர் செய்து வென்று

மீண்டுபோய் ஐந்தெழுத்தின் பொருளாக விளங்கும் சிவ பெருமானை வணங்கிய யோக நிலையை நல்கும் மயில்வாகனரே! அம்பிகை மகிழும் அருட்புதல்வரே! உலகங்கட்குத் தலைவரும் ரகு குலத்தில் ராமராக வந்தவரும் பாவத்தைப் போக்குபவரும் மாயையில் வல்லவருமாகிய நாராயணமூர்த்தியின் திருமருகரே! உலகங்கள் புகழ்ந்து மதிக்கின்ற அடியார்களுடைய உள்ளத் தில் உறைபவரே! ஞானமே வடிவாகக் குறவர் குலத்தில் வந்த பிடி யானை போன்ற வடிவுடைய வள்ளியம்மையாரது மண வாளரே! முருகப்பெருமானே! தேவர்கள் தங்கள் பொன்னுலகம் பெற்று வாழுமாறு அருள்புரிந்த பெருமிதமுடையவரே! சூதாக வைக்கும் உணவின்மீது ஆசைகொண்டு ஓயாது உழல் கின்ற மீனைப்போலே! ஆடைகளால் அலங்கரித்து அழகு செய்வதனால் பெண்கள் உடம்பு மாந்தளிர் போன்றது என்று கூறி மாதராசையிலும் பொருளாசையிலும் உழன்று திரிகின்ற போது, முடிவில் வருகின்ற காலன் என்ற கூற்றுவனுடைய அமைச்சன், முதல் நாள் எழுதிய விதிப்படி மாறுபாடின்றி என்னைத் தேடி உயிரைப் பற்றுதற்காக வரும்போது ஆதி முருகா! ஆதி முருகா! ஆதி முருகா! என்று அடியேன் உமது திருநாமத்தைக் கூறுகின்ற தகவையும் நினைவையும் ஆதி முருகா! அடியேனுக்குத் தந்தருள்வீர்.

விரிவுரை

சூதினுண வாசைதனிலே சுழலு மீனதேன:—

மனிதனுக்கு உணவு நியதி இன்றியமையாதது. வாழ் வதற்காக உண்ணவேணும்; உண்பதற்காக வாழக்கூடாது. பசிக்குச் சாப்பிடவேணும்; ருசிக்குச் சாப்பிடக் கூடாது. நாவுக்கு அடிமையாகக் கூடாது.

முன் உண்டது நன்ருகச் செமித்த பின்னரேயே அள வறிந்து உண்ணவேணும். அவ்வாறு உண்போர் நெடுங் காலம் வாழ்வார்கள்.

> அற்ருல் அளவறிந் துண்க அஃதுடம்பு
> பெற்ருன் நெடிதுய்க்கு மாறு.

—திருவள்ளுவர்.

காலத்தையும் இடத்தையும் உடல் நிலையையும் நன்கு பார்த்து உணவை ஆய்ந்து துவரப் பசித்தபின் உண்ண வேண்டும். அவ்வாறு உண்போன் நோய், அகால மரணம் முத லிய இடர்களுக்கு ஆளாகமாட்டான்.

> அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
> துய்க்க துவரப் பசித்து.

—திருவள்ளுவர்.

உண்ணப் போகும்போது தூய்மையாக இருந்து ஆறுதலுடன், வேகமின்றி, வீண்பேச்சுப் பேசாமல், இடை யிடையே தண்ணீர் பருகாமல், நன்கு மென்று அமைதியாகச் சாப்பிட வேண்டும். தண்ணிருக்கும் காற்றுக்கும் சிறிது இடம்வைத்து உண்ணவேண்டும். தலையணைக்குப் பஞ்சடைப்பதுபோல் வயிறு புடைக்க உண்ணக்கூடாது. ஒரு உணவுக்கும் மறு உணவுக்கும் இடையே அமுதமே யானாலும் அருந்தக் கூடாது. சிறிது குறைவாகவே உண்பான் இன்பமாக இருப்பதுபோல், அதிகமாக உண்பான் நோயினால் துன்புறுவான்.

இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய். —திருவள்ளுவர்.

அன்ன விசாரம் அதுவே விசாரமாக இருக்கக் கூடாது. பசி யாறிய பின்னும் அடுத்த உணவைப் பற்றிச் சிந்திக்கக் கூடாது. பகலில் உண்ணும்போதே "இடைவேளைக்கு என்ன செய்கின்றாய்? இரவுக்கு என்ன தயாரிக்கப் போகின்றாய்" என்று கேட்கின்றார்கள். இது உணவு ஆசையை அறிவிக்கின்றது.

திருவருள் சிந்தனையுடன் ஒருமையுடன் உணவு செய்ய வேண்டும்.

கிழக்கே நோக்கி யுண்பார்க்கு ஆயுள் வளரும்; மேல்பால் நோக்கி யுண்பார்க்கு செல்வம் வளரும்; தென்பால் நோக்கி யுண்பார்க்குப் புகழ் வளரும்; வடபால் நோக்கி யுண்பார்க்கு நோய் வளரும்.

கீழ்பால் நோக்கி யினிதுண்டார்க் காயுள் வளரும் கிளர்நிதியம்
தாழ்வின் றுயரும் குடதிசையே நோக்கி யருந்தில் தணப்பருஞ்சீர்
ஊழில் பெருகும் தென்திசையை நோக்கி யருந்தில் ஒருகாலும்
வாழி மாந்தர் வடதிசையை நோக்கி யருந்தல் மாண்பன்றே.
—கூர்மபுராணம்.

உணவினாலேயே குணங்கள் மாறுபடுகின்றன. இலைக்கறி, அவரை, துவரை, அவல் பொரி முதலியன சத்துவ குணத்தை வளர்க்கும்; பூண்டு, வெங்காயம், மிள்ளங்கி, சுரை முதலியன ராஜஸ குணத்தை வளர்க்கும்; பிண்ணாக்கு, பழங் கறி, எருமைத் தயிர், புலால் முதலியன தாமத குணத்தை வளர்க்கும்.

புல்லுண்ணுகின்ற ஆடு மாடு யானை முதலியன மந்தை மந்தையாக உலாவி கலந்து வாழ்வதைக் காண்க. புலால் உணவு உண்ணும் புலி சிங்கம் நாய் முதலியன ஒன்றைக் கண்டால் ஒன்று சீறியும் கடிக்கப் போயும் இகலுவதையுங் காண்க.

ஆதலால் ஒவ்வொருவரும் உணவு நியதியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தண்ணீரில் பல உயிர்கள் வாழுகின்றன. சூதாக உணவை இரும்பு முள்ளில் கட்டி தண்ணீரில் விட்டு அசைப்பார்கள். தண்ணீரில் வாழுகின்ற நண்டு தவளை முதலிய உயிர்கள் அத் தூண்டிலில் விழுவதில்லை. ஏன்? அவைகளுக்கு உணவு நசை கிடையாது. உணவு விருப்பத்தால் பசி இருப்பினும் இல்லையேனும் இடையருது தண்ணீரில் எது கிடைக்குமோ என்று அலைந்த வண்ணமாக இருக்கும் மீன் மட்டும் அத் தூண்டிலில் விழுந்து துன்பப்படுகின்றது.

ஆகவே மீனைப்போல் நாம் உணவு நசையுடன் திரியக் கூடாது.

தூசு வழகான வடிவதனலே:—

ஆண்களும் பெண்களும் தங்களை நல்ல ஆடைகளால் அலங்கரித்துக் கொள்வர். ஆடையும் மானத்தை மறைப்பதற்கும், உடல் நலத்திற்குமாகவே இருக்கவேண்டுமே யன்றி, ஆடம்பரத்திற்கும் சுகக் கேட்டுக்குமாக அமையக் கூடாது. மிக விலை உயர்ந்த ஆடைகளைத் தோய்க்க முடியாது. உடுத்து உடுத்து மடித்து வைப்பர். வேர்வையால் வரும் நச்சுக் கிருமிகள் வளர்ந்து நோய் வளரும். நாளும் நாளும் தோய்த்து உடுக்கும் உடையால் நலம் பெருகும். ஆடம்பரமான ஆடைகளையெடுப்பதனல் பணம் விரையமாவதுடன் பிறர் மனமும் பழுதுபடும். பிறர் உள்ளத்தை ஈர்க்கும்படியாகவும் உடுக்கக் கூடாது. உடை ஒரு அமைதியை உண்டுபண்ண வேண்டும். முக்கியமாக தனவந்தர்கள் எளிய உடையை உடுத்துக் காட்ட வேண்டும். தனவந்தர்கள் உயர்ந்த உடையை உடுப்பதனல் அதைக் கண்டு ஏழைகளும் கடன்பட்டு உயர்ந்த உடையை வாங்கி உடுக்கின்ருர்கள். ஆகவே ஏழை எளியவர்கட்கு வழிகாட்டியாக தனவந்தர்கள் எளிய உடையை உடுக்க வேண்டும். பட்டைவிடப் பருத்தி உடையே உடல் நலத்திற்கு ஏற்றது.

சிலர் தீப் பிடித்தாலும் விரைவில் அவிழ்க்க முடியாத முறையில், உதிரவோட்டம் நன்கு ஓடாதவாறு அழுத்தமாகவும் உடுத்து உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ளுகின்ருர்கள்.

சூதமுட் னேருமேன மாதர்நசை:—

சூதம்—மாமரம்.

இங்கே இது மாந்தளிரைக் குறிக்கின்றது. "ஆலிடை துயின்ருன்'' என்புழி ஆலிலை யென்று கொள்வதுபோல் என்றறிக.

பெண்களின் உடம்பு மாந்தளிரைப்போல் மென்மையாகவும் பளபளப்பாகவும் இருக்கின்றதென்று எண்ணியும் இயம்பியும், அம் மாதரை யடைய முயன்றும் வாணாளை வறிதாக்கி மாந்தர் மடிகின்றனர். பொன்னாசையிலும் மண்ணாசையிலும் பெண்ணாசையே வன்மையானது. பெண்ணாசையால் பொன்னையும் பொருளையும் தேடுகின்றான். தேடிக் கோடிக் கணக்காக ஈந்து வறுமை யெய்திச் சிறுமைப் படுகின்றான். ஆனபடியால் அவ்வாசையை யகற்றி நலம் பெறவேண்டும்.

தேடு பொருளாசை தமிலே சுழல:—

மனிதன் உண்டு உறங்கிய நேரம்போக மிகுதிநேரம் முழுவதும் பொருள் தேடுவதிலேயே கழிக்கின்றான். கடவுள் நாம் செய்த அளவற்ற புண்ணியத்தில் கொடுத்த இந்த அரிய உடம்பைக் கூடப் பொருளாசையால் கெடுத்துக் கொள்ளுகின்றான். வயிற்றுக்காகக் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் உழைக்கின்றார்கள் ஏழைகள். தனவந்தர்கள் இரவு பகலாகச் சிந்தாகுலமுற்று அலைகின்றார்கள். உடல் நலம் பேணாது உழல்கின்றார்கள்.

வருகாலன்:—

காலன்—இயமனுடைய அமைச்சன்.

காலமறிந்து உயிர்களைப் பற்றவருவதால் இப்பேர் பெற்றான். மிக்க பாவஞ் செய்தவர்களைப் பற்ற இயமனுடைய தூதர்கள் வருவார்கள். புண்ணியம் மிகுதியாகவும் பாவஞ் சிறிதாகவும் செய்த தக்காரைப் பற்றக் காலன் வருவான். மிகப்பெரும்புண்ணியஞ் செய்து ஒன்றிரண்டு பாவஞ் செய்தாரைப் பற்ற இயமன் என்ற தலைவனே வருவான்.

உடம்பு முகந்துகொண்ட வினைகளைத் துய்த்து முடிந்தவுடன் அவ்வுயிர்கள் கடமை மறந்து மடமையுடன் வாழ்ந்த மறச் செயலைக் கருதி, காலனும், அவனுடைய தூதர்களும் சினத்துடன் விழிகளில் தீப்பொறி சிதற பற்களைக் கடித்து பாசக்கயிறும் தண்டுந்தாங்கி கரிய வுருவத்துடன் வருவார்கள்.

"முதல வினை முடிவிலிரு பிறையெயிறு கயிறுகொடு
முதுவடவை விழிசுழல வருகால தூதர்" —திருவகுப்பு.

ஆதிவிதியோடு பிறழாத வகை தேடி யென தாவிதனையே குறுகி வருபோது:—

ஆதியிலேயே பிறக்கும்போது இவன் இத்தனைக் காலந்தான் வாழ வேண்டும் என்று அயன் எழுதிவிடுகிறான். அந்த விதிப்படிதான் அனைவரும் வாழ்வார். அதனை ஒருவரும் மாற்றி யமைக்க முடியாது.

முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையார் — கந்தபுராணம்.

அதிசயம் ஒருவரால் அமைக்க லாகுமோ
துதியறு பிறவியின் இன்ப துன்பந்தாம்
விதிவசம் என்பதை மேற்கொளாவிடின்
மதிவலியால் விதி வெல்ல வல்லமோ. —இராமாயணம்.

எனவே விதிவழி இயமனுடைய அமைச்சன் காலன் என்பான் நம் உயிரைப் பற்றவருவான். அவ்வாறு வருகின்ற காலத்தில் என்ன செய்யவேண்டும்?

ஆதிமுருகா........எனவும் ஆதிமுருகா நினைவு தருவாயே:—

"முருகா முருகா" என்ற இறைவனுடைய திருநாமத்தைக் கூறவேண்டும். "மொழிக்குத்துணை முருகா என்னும் நாமங்கள்" என்கின்றார் கந்தரலங்காரத்தில். "பெரும் பெயர் முருக" என்கின்றார் நக்கீரர். ஆகவே "முருகா முருகா" என்று கூறினால் உய்வுண்டு. உயிர் பிரியும்போது கருவி கரணங்கள் யாவும் ஒடுங்கி விடும் ஆதலால் நம்மால் இறைவன் திருநாமத்தைக் கூறமுடியாது. அதனால் அவ்வாறு கூறும் ஆற்றலை ஆண்டவனே தரவேண்டும். "ஆதிமுருகா! ஆவி பிரியும் போது ஆதி முருகா! ஆதி முருகா! ஆதி முருகா என்று அழைக்க எனக்கு நினைவைத் தரவேணும்"

ஓதமுகிலாடுகிரி..........யோக மயிலா:—

கிரவுஞ்சமலையினாலும், தாரகன், சிங்கமுகன், சூரபன்மன் முதலிய அசுரவேந்தர்களாலும் அமரர்கள் அளவற்ற அல்லலுற்று அருள் கடலாகிய அரனாரிடம் முறையிட்டனர். சிவமூர்த்தி முருகவேளைத் தமது நெற்றிக் கண்ணினின்றுந் தோற்றுவித்தனர்.

அந்திவண்ணர் கந்தவேளைச் சூராதியவுணரை ஒடுக்குதற் பொருட்டு விடை கொடுத்து அனுப்பினர். முருகவேள் வேற்படை தாங்கிச் சென்று, சூராதி அவுணர்களை அழித்து, அமரர்களைப் பொன்னுலகத்தில் குடியேற்றி, திருக்கைலாய மலை சென்று பிதாவாகிய சிவபெருமானை வணங்கினர். இந்த அழகிய வரலாற்றை இந்த அடியில் அழகாக அடிகளார் கூறியுள்ளார்.

மயில் விந்து தத்துவம். அது சிவயோகத்திற்குத் துணை புரிவதனால் "யோக மயிலா" என்று கூறியருளினர்.

நாடுமடியார்கள் மனதுறைவோனே:—

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பான் எனினும் அடியார்கள் உள்ளத்தில் தயிரில் நெய்போல் விளங்கித் தோன்றுகின்றான். ஆலயங்களிலேயுள்ள மூர்த்திகளிடத்தேயும் பூஜைபுரியும் வேளையிலேயே சிறப்பாக விளங்கித் தோன்றுகின்றான். ஆகவே அடியார்கள் உள்ளத்தில் எக்காலத்தும் இறைவன் உறைவதால் அடியார்கள் வழிபாடு மிகவும் சிறந்தது எனவுணர்க.

"மருவு மடியார்கள் மனதில் விளையாடு
மரகத மயூரப் பெருமாள்காண்".

கருத்துரை

அசுரகுலகாலரே! திருமால்மருகரே! வள்ளி மணவாளரே! உணவாசையினாலும் பெண்ணாசையாலும் அடியேன் உழலாமல் உனது முருக நாமத்தை எப்போதும் நினைக்க அருள்புரிவீர்.

அறமொழிகள்

45. சந்திரனொளியைக் கண்டு மகிழ்வதே சிறப்பு. அதில் உள்ள சிறிய களங்கத்தைச் சிந்திப்பானேன். பெரியோர்கள் இயல்பும் இத்தகைத்தே.

∴ ∴ ∴ ∴ ∴

46. மண்ணை சல்லித்து பொன்னை எடுப்பவன்போல் நூல்களை வாசிக்கையில் அதன் நுண்ணியக் கருத்துக்களை தேடிக் கொள்ள வேண்டும்.

∴ ∴ ∴ ∴ ∴

47. பெரியோர்கள் முனிவும் பெரும் நன்மையானதே. காரணம் அநீதிகளைக் கண்ட போதுதான் பெரியோர்கட்கு பெருஞ்சினம் மூளும்.

∴ ∴ ∴ ∴ ∴

48. பெரியோர்கள் குறைகள் விஷயத்தில் நீபெருங் குருடனாயிரு. அவர்கள் உயர்ந்த லட்சியங்களைப் பற்றுவதில் காந்தத்தைப் போலிரு. ரோஜா மலரின் கீழுள்ள சிறிய முள்ளுக்காக ரோஜா மலரைப் புறக்கணிக்க முடியுமா?

உ

திருச்சிற்றம்பலம்

பெரிய புராணம்

அதிபத்த நாயனார் புராணம்

"விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற்கடியேன்"

சூரியகுலத் தோன்றல்களாகிய சோழ மன்னர்கட்கு உரியதாகிய சோழவளநாட்டின்கண் கற்பகமலர் போல் கவின் பெற்று விளங்குவது **நாகப்பட்டினம்**. தொன்மையும் நன்மையும் வாய்ந்த அந்நகர் கடற்கரையில் நல்ல வளமுடையதாகப் பொலிவுற்றது. திருமகள் அங்கு இனிது வாழ்ந்தனள். கரி பரி முதலியவைகளும் விண்ணளாவிய மாடமாளிகைகளும் நிறைந்திருந்தன. கப்பல்களில் பற்பல பண்டங்கள் இறக்குமதியாவதும், ஏற்றுமதி செய்வதுமாக வாணிபத்திற்குத் தலைசிறந்திருந்தது. அளகை வேந்தனைப் போன்ற பெருநிதிக்கிழார்கள் வாழ்ந்து நல்லறங்களைச் செய்துகொண்டிருந்தார்கள்.

இத்தகைய நாகையம்பதியின் மருங்கிலே கடலை மிக அடுத்த **நுளைப்பாடி**யிலே பரதவர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் கடலில் சென்று வலை வீசி அதனால் வரும் மீன்களைவிற்று வாழ்க்கைச் சகடத்தை நடாத்துவார்கள். பெரிய வலைகளை இழுக்கின்ற ஒலியும், மீன் குவியல்களை விலை கூறியழைக்கின்ற ஒலியும், வெண் சங்கங்களைக் குவிக்கின்ற ஒலியும் அலைகடலுக்கு எதிரொலி செய்வதுபோலிருந்தன. அந்த நுளைப்பாடியிலே பரதவர் குலத்திலே பிறந்தவர் **அதிபத்த** நாயனார். இவர் சிவபெருமானுடைய திருவடியை மறவாதவராய் திருத்தொண்டு புரிந்துவந்தார். பரதவர் குலத்திற்குத் தலைவராய் அவர்கள் வலைவீசிப் பிடித்து மலைபோல் குவிக்கும் மீன்களைப் பெற்று வாழ்வார்.

இவ்வாறு வலையில் படுகின்ற மீன்களில் தலைசிறந்த ஒரு மீனை "இது சிவபெருமானுக்கு" என்று அளவற்ற அன்புடன் கடலில் விட்டுவிடுவார். இந்த நியதியில் அவர் நின்று ஒழுகினார்.

முட்டில் மீன்கொலைத் தொழில்வளத் தவர்வலை முகந்து
பட்ட மீன்களில் ஒருதலை மீன்படு தோறும்
நட்ட மாடிய நம்பருக் கெனநளிர் முந்நீர்
விட்டு வந்தனர் விடாத அன்புடன் என்றும் விருப்பால்.

ஒருநாளில் ஒரேமீன் கிடைத்தாலும் அதனையும் அரனார்க்கென்றே கடலில் விட்டுவிடுவார். பலநாள் தொடர்ந்து ஒவ்வொரு மீனே கிடைத்து வந்தது. அவ்வாறு அரிதிற் கிடைக்

கின்ற அவ்வொரு மீனேயும் கடலில் சிவமூர்த்திக்கு என்று விட்டு வந்தார். அதனால் வறுமை யடைந்து சுற்றத்தாரும் அவரும் உணவின்றி வாடினார்கள். அந்த நிலையிலும் அவர் மனம் வருந்தாராய் அகப்படும் ஒரு மீனை நியதி வழுவாமல் கடலில் விடுவாராயினர்.

சாலநாள்கள் இப்படிவரத் தாம்உண வயர்த்துக்
கோல மேனியுந் தளரவுந் தந்தொழில் குறையாச்
சீலமே தலை நின்றவர் தந்திறந் தெரிந்தே
ஆலம் உண்டவர் தொண்டர் அன்பெனும் அமுதுண்பார்.

பலநாள்கள் தொடர்ந்து இவ்வாறு நிகழ்வதால் அதிபத்த ருக்கு உணவின்றி திருமேனி தளர்ந்தது. தளர்ந்தும் அவர் பக்தி வளர்ந்தது. அவருடைய ஒப்பற்ற நியதி தளரவில்லை. ஆலகால விடமுண்ட இறைவர் அவருடைய அன்பென்னும் அமுதத்தை யுண்பாராயினர்.

இவ்வாறு நிகழுநாளிலே ஒருநாள் பரதவர்கள் மீன்பிடிக் கச் சென்று கிடைத்த ஒரு மீனைக் கடலில் விடுத்து, வலை வீசியபோது நவரத்ன மயமான மிக உயர்ந்த ஒரு மீன் அகப் பட்டது. உலகத்தை விலை மதிக்கும் அவ் வொப்பற்ற மீனைக் கொண்டு கரையேறினார்கள். இளஞ் சூரியன் உதித்தாற் போன்று உலகெலாம் அதிசயிக்க விளங்கும் அந்த அரிய மீனைத் தமது தலைவராகிய அதிபத்தரிடம் கொடுத்து நின்றார்கள்.

நவமணி யிழைத்த அப் பொன் மீனைக் கண்ட நாயனார், "ஆ..ஆ! இந்த அரிய மீன் என்னை யாளுடைய ஈசனுக்கே யாகும்" என்று அதனை மீளவும் கடலில் விடுத்தனர். பற்றை விடுத்த அப்பெரியவர் முன் இறைவர் விடை மீது தோன்றி யருளினார். மூவருந் தேவருங் காணுத முழுமுதலைக் கண்டு கண்ணீர் மல்கி பன்முறைப் பணிந்து பரவசமாயினர். சிவ போகத்தில் அடியவர்களுடன் உறையும் பேரின்ப வாழ்வை இறைவர் அவருக்கு வழங்கியருளினார்.

விளக்கம்

நாகப்பட்டினம்

சோழநாட்டில் கடற்கரையில் வளமையும் வாணிபமும் பொருந்திய நகரம் நாகப்பட்டினம். காரைக்காலம்மையா ருடைய கணவன் பரமதத்தனுடைய பிறப்பிடமும் அதுவே யாகும். தேவாரம் திருப்புகழ் பாடல் பெற்ற திருத்தலம். சோழநாடு ஒரு கற்பகக்கொடி. அதில் பூத்த மலர் நாகப் பட்டினம் என்கின்றார் தெய்வச் சேக்கிழார்.

"பொன்னி நாடெனும் கற்பகப் பூங்கொடி மலர்போல்
நன்மை சான்றது நாகபட் டினத்திரு நகரம்"

அதிபத்தர்

அதிகமான பக்தி பூண்டிருந்தபடியால் இவர் அதிபத்தர் எனப் பேர் பெற்ருர். மீன் பிடித்து விற்று உண்டு வாழும் பரதவர் குலத்தில் பிறந்தவரேனும் சிவபக்தியிற் சிறந்திருந்த தனுலும், நாளும் நாளும் தமது ஏவலர் பிடித்துவரும் மீன் களில் மிகவும் சிறந்த ஒரு மீனை சிவபெருமானுக்கு என்று கடலில் விடும் நியதி பூண்டிருந்ததனுலும் சிவகதி பெற்ருர்.

இறைவனுக்கு என்று தேர்ந்தெடுக்கும் பழம், தேங்காய், மலர் முதலியவைகள் சிறந்தவைகளாக இருக்கவேண்டும். மட்டமான பொருள்களை இறைவனுக்கு நிவேதிக்கும் குறைமதி யுடையார் இச்சரித்திரத்தை ஊன்றி நோக்கி உணர்ந்து உய்வு பெறுக.

இனி இவர் பலநாள் ஒவ்வொரு மீனே கிடைத்தும் நாடோறும் அதனை அரனுர்க்கென்றே விடுத்துப் பட்டினி கிடந்தார்.

பல நாள் பட்டினி கிடந்து மெய் தளர்ந்தும் மெய்மையினின் றும் தளராது நின்ருர். நவரத்தினங்களால் உறுப்புடைய பொன்னிற முடைய மீன் கிடைத்தது. அது உலகங்களை விலை மதிக்கத்தக்கது.

ஆன நாளொன்றில் அவ்வொரு மீனும்அங் கொழித்து
தூநிறப் பசுங் கனகநற் சுடர்நவ மணியால்
மீனுறுப்புற அமைத்துல கடங்கலும் விலையாம்
பான்மை அற்புதப் படியதொன் றிடுவலைப் படுத்தார்.

இத்தகைய உயர்ந்த மீன் கிடைத்தும் அதனை "விற்று தனது வறுமை நோயைக் களைய எண்ணுமல் உயர்ந்த இம் மீன் ஈசர்க்கேயாம் என்று மீளவும் கடலிலே விடுத்தார் என் னில் இவருடைய அன்பின் திறம் அளக்கற்பாற்றே?

இந்த பற்றற்ற அன்பினுல் பரம்பொருளைத் தெரிசித்துப் பரகதியடைந்தார்.

அகில லோகமும் பொருள் முதற் ருமெனு மளவிற்
புகலும் அப்பெரும் பற்றினைப் புரையற எறிந்த
இகலில் மெய்த்திருத் தொண்டர்முன் இறைவர்தாம் விடைமேல்
முகில் விசும்பிடை அணைந்தனர் பொழிந்தனர் முகைப்பூ.

2-92

உ

முருகா

கற்பு

பெரியநாயகி

இரண்டு மனைவியால் எய்தும் துன்பத்தை மன்னன் முழுவதும் அநுபவித்துவந்தான். பிள்ளையென்ற துன்பம் ஒன்றே ஒன்றுதான் முன் இருந்தது. அதனுடன் இப்போது ஒரு கோடி துன்பங்கள் விளைந்தன. பாவம்! புழுவைப் போல் துடித்தான். இளையவள் சாதுவானவள்; மூத்தவள் மூத்தவளே தான். வலிதிலே அவளுடன் சண்டையிடுவாள். கண்டபடி இளையவளை வைவாள். அவள் பொறுத்துப் போகப் போக இவள் துர்க்குணம் அதிகமாகிக் கொண்டே யிருந்தது.

மன்னன் இந்த வகையை நினைத்துப் பெரிதும் வருந்தினன். "இந் நகரே முழுவதும் எனக்கு அடங்கி நடக்கின்றது. கேவலம் இந்தப் பெண்பிள்ளைக்கு இவ்வளவு பெரிய வாயா? தாடகையே இந்த வடிவாக வந்துவிட்டாளா? பெரும் பாவமே பெண்ணுருவாக வந்து சேர்ந்தது.

எனக்குப் பிறகு இத் தகடூரை ஆள்வதற்குச் சந்ததியில்லையே யென்று இளையாளை மணந்தேன். அது வினையாக வந்து விடிந்தது. நயமாக அவளைத் திருத்துவோம்" என்று தனக்குள் கருதினன்.

சுதர்மன் என்ற அம் மன்னன் மூத்தாளாகிய **மாதங்கியை** ஒரு நாள் தனியே சந்தித்து, "பெண்ணே! நான் சொல்லுவதை நன்கு சிந்தனைசெய்; இளையாளை யேன் நீ வெறுக்கின்றாய்? அவள் உனக்குத் தங்கை மாதிரியல்லவா? ஒரு உடம்புக்கு இருகரங்களைப் போலே எனக்கு நீங்கள் இருவரும் ஒற்றுமையாக இருந்து இன்பஞ் செய்யவேண்டாவோ? நேற்றிருந்தார் இன்றில்லை. சிலநாளும் பலநோயும் உடைய நமது வாழ்வு சண்டை சச்சரவுடன் கழியலாமா? சென்றது செல்லட்டும். இனியாவது நீ அவளை வெறுக்காதே. ஒற்றுமையாக இரு" என்றான்.

மாதங்கி, "நான் என்ன கொடுமைக்காரியா? கொண்டவனே இப்படி தூற்றினல் கண்டவர் தூற்றக் கேட்கவேணுமா? நான் எவ்வளவோ பொறுத்துப்போகின்றேன். அவள் ஊமை போல் இருந்து செய்கின்ற விஷமம் வெளிப்படுவதில்லை. நான் சூதுவாதில்லாமல் பேசிவிடுகின்றேன். என்ன இருந்தாலும் உங்களுக்கு இளையவள்மேல் மோகம். அதனல் அவள் பக்கம் சேர்ந்து என்னை இப்படி அலக்கழிக்கின்றீர். நான் கிணற்றிலாவது விழுந்து மாள்வேன். நீங்களும் அவளும் மங்களமாக வாழுங்கள்" என்று கூறி அழுதாள்.

சுதர்மன் என்ன செய்வான்? இவ்வாறு முன்னுக்கும் போகமுடியாமல் பின்னுக்கும் ஒதுங்கமுடியாமல் வேதனை யுற்றான். இளையாள் **அன்னபூரணி** திருவருளால் கருவடைந்தாள்.

இதையறிந்த மாதங்கிக்கு மனம் மறுகியது. முகங் கருகியது. ஆலையடுப்புபோல் கொதிப்புற்றாள்.

ஒருநாள் தை முதல்தேதி. நல்ல நாளாயிற்றே யென்று இளையவள் ஒரு தட்டில் பழம் தாம்பூலம் மலர் கற்கண்டு முதலியவற்றை எடுத்துக்கொண்டு மூத்தவள் இருக்கும் இடம் சென்று அவள் முன் அதை வைத்து வணங்கினாள். நல்ல நாள்களில் பெரியவர்களை வணங்குவது நம் நாட்டுப் பண்பாடு. அவ்வாறு வணங்கிய அன்னபூரணியைக் கண்டவுடன் பொறாமையால் புழுக்கங்கொண்டிருந்த மாதங்கி தீயை மிதித்தவள் போல் துள்ளினாள். கண்களை உருட்டி வாயை மடித்து பெண்சிங்கம் போல் உறுமினாள்.

"ஏண்டி! என்னை மலடி மலடி என்று நிந்திக்கின்றாயே. உனக்கென்ன மமதை? பிள்ளையார் வேஷம் போட்டுக்கொண்டோமே என்ற அகந்தையா? என் கணவனையும் மயக்கி என்னை எட்டியாகக் கசக்கும்படி செய்துவிட்டாய். உனக்கு நல்லகதி வருமா? உன் வயிற்றிலேயிருந்து பிறக்கப் போகின்ற பிள்ளை உருப்படுமா? உனக்கு விநாசகாலம் வந்திருக்கின்றது. மூதேவி! என் வயிற்றெரிச்சல் உன்னை விடாது. நீ அழுகிப் புழுத்துச் சாவப்போகின்றாய். உன்னை நான் என் தங்கைபோல் நினைத்தேன். நீ கருவடைந்ததை யறிந்து மட்டற்ற மகிழ்ச்சியுற்றேன். நமது ராஜ வம்சத்திற்கு ஒரு சற்புத்ரன் பிறக்கட்டும் என்று எண்ணி உள்ளம் குளிர்ந்தேன். சண்டாளி! அப்படி எண்ணிய என்னை நீ கண்டபடி வைகின்றாய் என்று கேள்விப் பட்டேன். நீ உருப்படுவாயா? உன் வயிற்றிலேயிருந்து பிள்ளை செத்துப் பிறக்கப் போகின்றது. ம்...ம்... உனக்குத் தலைகால் தெரியவில்லை. ஆனாலும் இத்தனை கர்வம் கூடாது" என்று சரமாரியாக வைதாள்.

இளையவள் நடுங்கிவிட்டாள். அவள் கால் மீது விழ்ந்து, "அக்கா! கடவுள் சாட்சியாகத் தங்களை நிந்தித்ததே கிடையாது. தங்களை மலடி யென்று மனதினால் கூட நினைக்க வில்லையே. யாரோ தங்களிடம் பொய் சொல்லிக் கலகம் செய்திருக்கின்றார்கள். தாங்கள் என் சொல்லை நம்புங்கள். என்னைத் தங்கள் வாயால் அபசகுனமாக வையவேண்டாம். நீங்கள் எனக்குத் தாய் போன்றவர்கள். நான் உங்களை ஒரு போதும் அவமதிக்க மாட்டேன். நல்ல நாளில் தாங்கள் இப்படி அமங்கலமான சொற்களைச் சொல்ல வேண்டாம்" என்று கூறி கண்ணீர் வடித்தாள்.

மாதங்கி, “அடியே! மாயக்கள்ளி! இப்போது ஏன் அழுகின்றாய்? நான் உன்னை என்ன சொன்னேன்? ஒன்றுமே கூறவில்லையே. இப்படி அழுதால் நீசொன்ன நிந்தனைகள் மறைந்து போகும் என்று எண்ணுகின்றாயா? என் வீட்டிற்கு வலிய வந்து அழுது என் வீடு குட்டிச் சுவராகப் போகவேண்டும் என்று கங்கணங் கட்டிக்கொண்டாயா? என்று முன்னையினும் பன்மடங்கு கோபமாகவும் உரத்த குரலிலும் பேசி ஆரவாரஞ் செய்தாள்.

அந்த வேளையில் மன்னன் சுதர்மன் அங்கு வந்தான். இந்த நிகழ்ச்சியைக் கண்டான். “என்ன சங்கதி” என்று வினாவினான். உடனே மாதங்கி, “எல்லாம் உங்களால் வந்ததுதான். இதோபாருங்கள் இந்தச் சிறுக்கி நாளும், கிழமையுமாக என் வீடேறி வந்து என்னைச் சண்டைக்கு இழுக்கின்றாள். என்னை மலடி என்று ஏளனம் பண்ணுகின்றாள். அம்மா! வா இரு என்று நான் எவ்வளவோ அன்புடன் அழைத்து உபசரித்தும் இவள் என்னை அவமதித்துப் பேசுகின்றாள். நீங்களே பார்த்து நியாயஞ் சொல்லுங்கள்” என்றாள்.

சுதர்மன் இளையாளை நோக்கி, “பெண்ணே! என்ன விஷயம்! இங்கு அக்காளை ஏன் மலடி என்று நீ நிந்தித்தாய்? உண்மையைச் சொல்” என்று கேட்டான். அன்னபூரணி கணவனைக் கைதொழுது கூறுவாள். “சுவாமி! இன்று மகர சங்கராந்தி. அக்காவை அஞ்சலி செய்து ஆசிர்வாதம் பெறலாம் என்று இங்குவந்தேன். நமது அரண்மனையில் யாரோ கலகக்காரர்கள் இருக்கின்றார்கள். நான் அக்காவை உங்கள் பாத சாட்சியாக ஒரு அணுவளவு கூடத் தவறாக நினைத்ததேயில்லை. நினைப்பிலேயே பிழையில்லை யென்றால் பேச்சில் எப்படி இருக்க முடியும்? நான் சொல்லாத சொற்களைச் சொன்னதாக இவர்கள் எண்ணி என் மீது அளவிலாது கோபிக்கின்றார்கள். வேறு ஒன்றுமில்லை. பெரியவர்கள் கோபித்தாலும் வைதாலும் அது ஆசிர்வாதந்தானே. அக்கா என்னை அடித்தாலும் வைதாலும் எனக்கு க்ஷேமந்தான். அடித்த வேட்டி வெண்மையடையும்; துளைத்த மணி கழுத்தில் இருக்கும்; வளைத்த மூங்கில் பல்லக்கில் இருக்கும்; அரைத்த சந்தனம் அபிஷேகத்திற்கு ஆகும். ஆகவே மூத்தோர் கோபம் நன்மையே செய்யும். இதுதான் நிகழ்ந்தது” என்றாள். அவள் பேச்சில் உள்ள பொருளாழத்தையும் உண்மையையும் மன்னன் உணர்ந்தான், “நல்லது நீ உன் இருப்பிடம் போய்வா!” என்று அனுப்பினான்.

மாதங்கி, “நேற்று வந்தவள் எவ்வளவு சாமார்த்தியமாகப் பேசுகின்றாள். பேச்சிலேயே ஆளை மயக்கிவிடுகின்றாள். இது மாதிரிப் பேச எத்தனைப் பிறப்பெடுத்தாலும் எனக்கு வராது. நான் கறந்த பால் கறந்தபடி பேசுவேன். ஆ ஆ என்ன ஜகஜாலப் பேச்சு? மாயத் தளுக்கு” என்றாள். மன்னன் மெல்ல

அந்த இடம் விட்டு அகன்று தன் அரச கருமத்தில் ஈடு பட்டான். அவன் மனதில் மூத்தவள் புரியும் அட்டகாசம் உறுத்துக் கொண்டேயிருந்தது.

நல்லதொரு நாளில் அன்னபூரணி ஒரு பெண் மகவைப் பெற்றாள். மாதங்கியைத் தவிர மற்ற எல்லோரும் மகிழ்ந் தார்கள். கற்கண்டு தாம்பூலம் வழங்கினார்கள். வறியார்க்கு அன்னமும் சொன்னமும் வழங்கப்பட்டன. மறையவர்கள் வேதமந்திரங்களால் வாழ்த்தினார்கள். மங்கலப் பாடல்கள் ஒலித்தன. பலவகையான மங்கல வாத்தியங்கள் முழங்கின. ஊரெங்கும் அலங்காரம். தகடூரில் இந்திர விழாபோல் அது அமைந்தது.

குழந்தையைத் தொட்டிலில் இட்டு **பெரிய நாயகி** என்று பேரிட்டார்கள். குழந்தை பிறைமதி போல் வளர்ந்து வந்தது. மகேந்திரன் கரை காணாத மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினான். மாதங்கி அடிக்கடி வந்து குழந்தையுடன் கொஞ்சுவாள். "என் குலவிளக்கே! என் செல்வமே! மனத்துக் கிசைந்த மணி விளக்கே! என் கண்மணியே!" என்றெல்லாம் கொஞ்சிக் கொஞ்சி யழைத்து முத்தமிடுவாள். உள்ளத்தில் 'இதற்குச் சாவு வராதா?' என்று எண்ணிக் கருகுவாள். இவள் குழந்தையுடன் கொஞ்சும் போதெல்லாம் "குழந்தைக்கு ஏதாவது கேடு செய் வாளோ" என்று அன்னபூரணி அஞ்சினாள்.

மாதங்கி அன்னபூரணியைப் பார்த்து இனிமையாக அழைத்து, "அம்மா! குழந்தையை நன்கு கவனித்துக் கொள். எடுத்துப் பால் கொடு. நமது அரசகுலந் தழைக்க வந்த என் மாணிக்கத்தைக் கண்டால் கலிதீருமே. செல்வச் சீமாட்டியைத் தொட்டால் துன்பந் தொலையுமே. அசமந்தமாக இராதே. கண்ணை இமை காப்பது போல் பாதுகாத்துக்கொள். உனக்கு நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன். உன் மூலம் இந்தக் குலந் தழைத்தது" என்றாள்.

"ஒரு நாளும் இப்படி அவள் குளிர்ச்சியாகப் பேசியதே கிடையாது. அவள் மனம் குழந்தையைக் கண்டபின் திருந்தி யிருக்கலாம். கெட்டவர்கள் நல்லவர்களாக ஆவது இயல்பு தானே. கடவுள் கருணை. இந்த மட்டில் ஒரு ஒற்றுமையுண் டாயிற்றே. இனியாவது நமக்கு தொல்லையிராது" என்று கருதி இளையாள் இன்புற்றாள். மாதங்கியின் மனம் மாறி நிஜமாக அன்பு செய்வதாகவே நம்பினாள்.

குழந்தைக்கு வயது மூன்று நிரம்பியது. தளர்நடை யிட்டு நடந்தாள். அவள் தங்கப் பொம்மைபோல் அசையும்போது அழகு குலுங்கியது. அவளைக் கண்டால் கல்லுங் கரையும். ஆனால் மாதங்கியின் மனக்கல் மட்டும் கரையவில்லை. எப்படி

யாவது அக் குழந்தையைக் கொன்றுவிடவேண்டும் என்று திட்டமிட்டாள். அதற்கு என்ன வழியென்று சூழ்ச்சி செய்தாள்.

வஞ்சனை நிறைந்த நெஞ்சம் கொஞ்சமும் அஞ்சாது பஞ்சமாபாதகங்களையும் புரியும் பசும்புல் மூடிய கிணறுபோலே அவள் பெண்ணுருங்கொண்ட பேயாக இருந்தாள். அவள் இரும்பினும் வலிய நெஞ்சுடன் தீமைக்கு உறைவிடமாக நின்றாள்.

மாதவி என்ற தாதியை யழைத்து, "மாதவி! ஒரு முக்கிய மான செயலை மிகவும் இரகசியமாகச் செய்து முடிக்கவேண்டும். அவ்வாறு செய்து முடித்தால் உனக்கு ஆயிரம் பொன் தருவேன். என்னுடைய விசுவாசம் உனக்கு எப்போதும் இருக்கும். உன்னை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். எனது உதவி பலவிதத்திலும் உனக்குக் கிடைக்கும். நான் சொல்வதைக் கவனிக்கின்றாயா?" என்றாள்.

மாதவி, "அம்மா! தங்கள் உத்தரவுபடி எதையும் செய்வேன். இதுவரைக்கும் நான் எதையாவது செய்யாமல் விட்டிருக்கின்றேனா? என் உயிரையும் கொடுக்கத் தயார்" என்றாள்.

மாதங்கி, "மாதவி! விஷயம் ரொம்பவும் முக்கியமானது. அசட்டுத்தனமாக இருந்துவிடக் கூடாது. தெரியுமா? அந்த மூதேவி யிருக்கின்றாளே? என் சக்களத்தி. அவள் குழந்தையை இரவிலே ஒருவரும் அறியாமல் காட்டிலே கொண்டுபோய் கொன்றுவிட்டு வந்துவிடு. உனக்கு உன் ஆசைதீரப் பொன் தருவேன்" என்றாள். மாதவி, "அம்மா! ஐயோ பாவம். அது சின்னக் குழந்தையாச்சே. ரத்னக்கட்டி போலே இருக்கே. அதையா கொண்ணுடருது. மவாராஜர் அது மேலே உயிரே வெச்சிங்கிருங்களே. ஏனம்மா அந்தப் பச்சக் குழந்தை உங்களே என்னம்மா செய்ஞ்சுது" என்றாள். முகத்தில் பச்சாதாபமும் சொல்லில் ஒருவித கனிவும் இருந்தன.

"அடி மூதேவி! ஏது உனக்குக் கெட்டகாலம் பிடித்திருக்கிறதோ? நான் சொன்னதைச் செய்கின்றாயா? நீ என்ன எனக்குப் புத்தி சொல்ல வந்துவிட்டாய். நாயே! உனக்கு இது முதல் அரண்மனையில் வேலை கிடையாது. போ வெளியே" என்று கடிந்தாள் மாதங்கி.

மாதவி பயந்துவிட்டாள். அவள் கால் மீது வீழ்ந்து, "அம்மா! என்னை மன்னிக்கவேணும். நான் என்னமோ தெரியாமல் உளறி விட்டேன். நீங்கள் சொன்னபடியே செய்ஞ்சுடரேன். அந்தப் பழிபாவம் உங்களுக்குத் தான். நீங்கள் கோபிக்கவேண்டாம். காரியத்தை மிகவும் ரகசியமாக முடிச்சுடரேன். எனக்கு உங்களைவிட்டால் வேறு கதியேது?" என்றாள்.

அன்று அமாவாசை. ஒரு கொலையாளியைத் தயாரித்து, அரண்மனைக்குப் பின்புறம் வாயிலில் நிறுத்தினாள். மாதவி மெல்ல முன்னிரவில் அன்னபூரணியிருக்கும் மாளிகைக்குச் சென்று ஒருவரும் அறியாமல் ஒருபுறம் ஒளிந்துகொண்டாள். அவள் மனம் படபட என்று அடித்துக்கொண்டது. அச்சத்தால் உடம்பு நடுங்கியது. நடு இரவு. மங்கலாக விளக்கு எரிந்து கொண்டிருந்தது. காலுக்குத் துணி சுத்திக்கொண்டாள். அடிமேல் அடிவைத்து, அன்னபூரணியின் அருகில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை மெல்ல எடுத்தாள். விழித்துக் கொண்டு அழுதுவிட்டால் ஆபத்தாகிவிடுமே என்று மிகவும் பயந்தாள். தோட்டத்துக் கதவைத் திறந்துகொண்டு அரண்மனைக்கு வெளியே சென்றாள். அங்கே கரிய உடைதரித்துக் கொண்டு கத்தியுடன் தயாராக நின்றுகொண்டிருந்த கொலையாளி கையிலே கொடுத்து, "குசுகுசு" என்று பேசி "இதைக் கொண்டுபோய் காட்டில் கொன்றுவிட்டுவா" என்று கட்டளையிட்டாள்.

கொடிய வன்னெஞ்சுடைய அக்கொலைஞன் அக்குழந்தையை எடுத்துக்கொண்டுக் கானகஞ்சென்றான். ஒரு பாறை மீது வைத்தான். அக்குழந்தை கண் விழித்து, "அம்மா அம்மா!" என்று அழத் தொடங்கியது. அக்குரலைக் கேட்ட பேயும் இரங்கும். அக் கயவனுடைய கன்னெஞ்சுகரையவில்லை. வடிவாள் எடுத்து ஓங்கினான். திடீர் என்று ஒரு பாணம் அவன் மார்பில் தைத்தது. "ஐயோ" என்று அலறிக் கீழே விழ்ந்து மாண்டான்.

(தொடரும்)

அறமொழிகள்

49 உருவம் விகாரமாயிருக்கலாம். ஆயின் அவர் உள்ளம் உயர்ந்த பண்பாடுடையதாயிருக்கும். எனவே ஆழ்ந்து சிந்தியாமல் எவரையும் ஏளனமாக எண்ணாதே. குப்பையிலும் உயர்ந்தபொருள் மறைந்திருக்கலாமல்லவா?

∴ ∴ ∴ ∴ ∴

50 அறம் செய்து வாழ்வதே மக்கட்கு அருங்கடனாகும். ஏனெனின் ஆண்டவன் அறச்செயல்களால் அன்றோ மக்கள் பயன் பெறுகிறார்கள்.

∴ ∴ ∴ ∴ ∴

51 அறமில்லாத வாழ்வு, சிரமில்லாத உடலுக் கொப்பாகும். கூரையில்லா வீட்டைக் கொண்டாடுவாருண்டா? ஆகவே அறம் செய்யாதார்க்குப் புகழேது.

உ

முருகா

அந்தரங்க பக்தி

மதுரை தமிழகத்திற்கு நடுநாயகமானது. இதயம் போன்றது. துவாதசாந்தத்தலம். அத்தலத்தில் குமார பாண்டியன் என்பான் அரசுபுரிந்துவந்தான். அவன் ஆட்சியிலும் மாட்சியிலும் சிறந்தவன். குடிகளைத் தாய்போல் கருணையுடன் பாதுகாத்துவந்தான். அவனுடைய பரிஜனங்கள் எல்லோருமே நற்குண சீலர்களாய் இருந்தார்கள்.

அவனுடைய மனைவி சிறந்த முருகபக்தியுடையவள்; நெற்றி நிறையத் திருநீறு பூசி மஞ்சள் குங்குமந் தரித்து உமையம்மையாரைப் போலே விளங்குவாள். ஒவ்வொரு நாளும் பல்லக்கில் திருப்பரங்குன்றம் போய் முருகவேளைப் பக்தி பரவசத்துடன் வழிபடுவாள். எல்லையில்லாத அன்பு பூண்டு இடையறாது "முருகா!" "முருகா" என்று உள்ளம் உருகி ஓதுவாள். ஏழைகட்கு தானதருமஞ் செய்வாள். கார்த்திகை, சஷ்டி, மாதாந்த வெள்ளி முதலிய நாள்களில் உபவாசமிருந்து ஜபதபங்கள் செய்வாள்.

அம் மாதரசியின் கணவனாகிய பாண்டியன் இதற்கு நேர் மாறாக இருந்தான். கோயிலுக்குப் போகமாட்டான். முருகா என்று மறந்தும் கூறமாட்டான். அரசியலை நன்றாக நடாத்துவானே யன்றி அருளியலைக் கடைப்பிடித்தானில்லை.

மனைவி கணவனை நோக்கி, "அரசே! நமது உயிர்க்குயிராக விளங்கும் முருகனைத் தாங்கள் மறந்திருக்கலாமா? இன்று திருக்கார்த்திகை. திருப்பரங்குன்றத்திற்கு வாருங்கள். கலியுக வரதனைக் கண்குளிரக் கண்டு மகிழலாம்" என்றாள்.

மன்னன், "பெண்மணியே! நீ போய் தெரிசனை செய்துவிட்டு வருவாயாக. உனக்கு நான் தடை கூறவில்லை. ஆனால் என்னை அழைக்காதே!" என்று கூறி மறுத்துவிட்டான்.

இவ்வாறு பன்முறை மனைவி வேண்டியும் அரசன் ஆலயம் போய் ஆறுமுகக் கடவுளைச் சேவிக்க இணங்கினானில்லை.

அரசமாதேவிக்கு அதனால் அளவற்ற கவலை. கணவனுக்கு கடவுள் பக்தி யுண்டாகவேண்டும் என்று கருதினாள். "முருகா! மூவர் முதல்வா! என் கணவனாரை நீர் தான் தடுத்தாட் கொள்ளவேண்டும். அவர் வாக்கிலிருந்து முருகா என்ற சொல் வந்தால் உமக்கு ஆயிரம் பால் குடம் அபிஷேகஞ் செய்வேன். இலட்சதீபம் இட்டு விழாக் கொண்டாடுவேன்" என்றெல்லாம் வேண்டுதல் செய்து கொண்டாள்.

ஒரு நாள் இரவு, மன்னனும் மன்னன் மனைவியும் பள்ளியறையில் பஞ்சணையில் படுந்திருந்தார்கள். மன்னன் அயர்ந்து

தூங்கிக் கொண்டிருந்தான். பாண்டிமாதேவி விழித்தவண்ணம் ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தாள். மன்னன் பயங்கரமான கனவு கண்டு, அலறி 'முருகா! முருகா!' என்று வாய் பிதற்றிவிட்டான். இதனைக் கேட்ட அரசிக்கு அளவற்ற மகிழ்ச்சி. "தூக்கத்திலாவது நம் கணவன் முருகா! என்றாரே இதுபோதும். நம் தவம் பலித்துவிட்டது" என்று எண்ணி ஆறுதல் அடைந்தாள்.

விடியற்காலை எழுந்தாள். முதல் அமைச்சனை விளித்து, "மந்திரி! நான் ஒரு பொருளை நாடினேன். அது சித்தியாயிற்று; நமது மதுரையில் உள்ள சகல தேவாலயங்களிலும் அபிஷேக ஆராதனை நிகழட்டும். மீனாட்சி கோயிலிலும், திருப்பரங்குன்றம் ஆலயத்திலும் லட்சதீபம் இட்டு வழிபாடு சிறப்பாகச் செய்யுமாறு ஏற்பாடு செய். நகரத்தை அலங்கரிக்கச் செய்" என்று கட்டளையிட்டாள். அமைச்சன் அவ்வாறே ஏற்பாடு செய்தான்.

மன்னன் விடிந்த பின் எழுந்து நீராடி சபாமண்டபத்திற்கு வந்தான். ஊரெங்கும் வாழை கமுகுகள் நாட்டி, பூமாலைகள் தொங்கவிட்டு மாயிலைத் தோரணம் கட்டி அலங்கரித்திருப்பதைக் கண்டான். நகரெங்கும், மேளம், தாளம், பஜனை, முதலியன முழங்குவதைக் கேட்டான்.

"மந்திரி! இன்றைக்கு என்ன விசேடம்? எங்கு பார்த்தாலும் அலங்காரம்; பெருங் கொண்டாட்டம். காரணம் யாது?" என்று வினவினான்.

மந்திரி, "மன்னர் பெருமானே! இன்றைக்கு விசேடம் ஒன்றுமில்லை. அரசமாதேவியாருடைய கட்டளைப்படி இவைகள் நிகழுகின்றன" என்றான்.

அரசன் அருகில் இருக்கும் தேவியை நோக்கி, "பெண்ணே! இன்று என்ன விசேடம்? இந்தக் கொண்டாட்டம் எதன்பொருட்டு நிகழ்கின்றது?"

"அரசே! எனது நீண்ட காலத்து எண்ணம் நிறைவேறியது. அதனால் இது நிகழ்கின்றது"

"உனது எண்ணம் யாது? அது எப்போது எவ்வாறு நிறைவேறியது?"

"பெருமானே! தங்கள் திருவாக்கிலிருந்து "முருகா" என்ற சொல் வராதா? என்று எதிர்பார்த்தேன். அதற்காக ஆண்டவனிடம் வேண்டுதல் செய்தேன். அது பலித்துவிட்டது"

"பெண்ணே! என் வாயிலிருந்து அந்த நாமம் வெளிப்பட்டதா?"

"ஆம். இரவு உறங்கும்போது தாங்கள் ஏதோ பயங்கர மான கனக்கண்டு, "முருகா முருகா" என்று வாய் பிதற்றினீர் கள். அதுதான் என் தவம். என் தவம் நிறைவேறியது. அதற்காகவே எங்கும் அலங்கரித்து, ஆராதனையும் அன்ன தானமும் நிகழ்த்துகின்றேன்.

மன்னன் கேட்டு அப்படியே திகைத்து நின்ருன். "ஆ முருகா! நான் உன்னை உள்ளத்தில் ஒரு கணமும் மறவாது தியானித்து வந்தேன். என்னுடைய முருக பக்தி உலகம் அறியக்கூடாது என்று கருதி அந்தரங்க பக்தி செய்தேன். இப்போது என் பக்தி வெளிப்பட்டுவிட்டதே. ஞானபண்டிதா! கருணைக் கடலே பக்தி வெளிப்பட்டு என்னைப் பக்தன் என்று உலகம் அறிந்ததே. ஆ!" என்று கீழே வீழ்ந்தார். அவர் கரங்கள் குவிந்தன. கண்ணீர் சிந்தியது. அவர் சிரத்தில் இருந்து ஒரு ஜோதி புறப்பட்டு விண்வழி சென்று மறைந்தது. ஆவி பிரிந்தது.

இத்தகைய அந்தரங்க பக்திசெய்யும் உத்தமர்களை நாம் காண்பது அரிது. **"உளத்துள் அன்பினர் உறைவிடம் அறிகிலன்"** என்கின்ருர் அருணகிரிநாதர். அந்தரங்க பக்தர்கள் நீறு பூத்த நெருப்பு போல் இருப்பார்கள்.

காலாந்தரத்தில் பாண்டிமாதேவியும் பரமனடி சார்ந்தாள்.

அறமொழிகள்

52. அறத்தை பொருளில் மட்டுமல்ல நல்ல வாக்காலும், மனத்தாலும் கூட ஆற்றலாம்.

ஃ ஃ ஃ ஃ ஃ

53. அறஞ்செய்யாதார் இம்மையிலும், மறுமையிலும் இன்பத்தைக் காணமுடியாது. விவசாயம் செய்யாத வெறும் நிலத்தில் அறுவடையைக் காண முடியுமா?

ஃ ஃ ஃ ஃ ஃ

54. தனக்கென்றே வாழ்வது தவறு. இயன்றளவு பிறர்க்கு ஈந்து உதவுக. கிளை வெட்டிய மரம் நன்ருய்த் துளிர்க் கக் காண்கின்ருேமல்லவா?

ஃ ஃ ஃ ஃ ஃ

55. உலகத்தைச் சற்று உற்று நோக்குக. ஆண்டவன் உனக்குச் செய்துள்ள அறங்கள் விளங்கும். அதை ஏன் நீ சிறந்த உதாரணமாகக் கொள்ளக்கூடாது? (மு. பெருமாள்)

301

உ
முருகா

கணவர் பெயர் கூறலாமா?

(அன்பன் மூ. பெருமாள்)

பத்மா! நீ பத்து வயதுப் பெண்ணுயிற்றே, இருபது வயது வந்த உன் அண்ணனைக் கணேசா! என்று பெயரிட்டு அழைக்கலாமா? சின்ன வயதாக நீ இருந்தபோது பெயரிட்டுக் கூப்பிட்டதை குழந்தை தானே என எல்லோரும் பொருட்படுத்தாமல் இருந்தோம். இனியும் நீ அண்ணனைப் பெயரிட்டு அழைப்பது நல்லதல்ல. ஆகவே இனி நீ அண்ணு என்று அழை. அவனைப் பெயரிட்டு அழைக்காதே.

அம்மா! சிறியவர், பெரியவர், அன்பு என்பதெல்லாம் வாயளவில் கூடாது. மனத்தளவில் வேண்டும். மரியாதை என்பது கூட அப்படித்தான்.

பத்மா! நீ பேசுவது சரியல்ல. அன்பும், மரியாதையும் சொல், சிந்தனை என்ற இரண்டிலும் இருக்கவேண்டும். பேச்சும் செயலும் ஒத்திருப்பதுதான் நல்ல மனிதப் பண்பாகும்.

அம்மா! வயதில் மூத்தவரைப் பெயரிட்டு அழைப்பது தவறு என்று தெரிவிக்கின்றீர்களே! நம் யாவருக்கும் கடவுள் பெரியவர்தானே! அவரைமட்டும் தாங்களும், மற்றவர்களும் பெயரிட்டுச் சொல்லி பூசிப்பதும் பாடுவதுமாக யிருக்கின்றீர்களே! இதுமட்டும் கடவுளை அவமதிப்பதாகாதா? காலமும் யுகங்களும் கடந்த கடவுளையே பெயரிட்டு அழைக்கும்போது நம் போன்ற மனிதர்களைப் பெயரிட்டு அழைப்பது எப்படித் தவருகும்?

பத்மா! உனது புத்திசாலித்தனமான கேள்வியைக் குறித்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். நான் அதற்குக் கூறப்போகும் பதிலைக் கவனமாகக் கேள். கடவுள் ஒரு நாமம் ஒருருவம் உடையவரல்லர். பல நாமங்கள் பல உருவங்கள் கொண்டவர். அவருக்கு வேதங்களும் பல மகான்களும் அவரது ஒப்பற்ற சிறப்புகளை வியந்து காரணப் பெயராகவும், சிறப்புப் பெயராகவும் பேராயிர நாமங்களை வைத்து வணங்கி வாழ்த்தி வழிபட்டனர். ஆகவே அவருடைய ஒவ்வொரு பெயருக்கும் சிறந்த மந்திர சக்தியும் பெருமையும் உண்டு. அதனுல்தான் அவரது சிறந்த திருப்பெயர்களை நூற்றெட்டாகவும், ஆயிரத்தெட்டாகவும் உச்சரித்து மலரிட்டு அர்ச்சித்து வழிபாடு செய்யப்படுகின்றது. அவரது திருப் பெயர்களை உச்சரிக்கும்போது நம் உள்ளத்தில் பக்தி உணர்ச்சிப் பெருக்கெடுத்து நம்மை நல்வழிப்படுத்த அது பெரும் உதவியாக யிருந்துவருகின்றது.

ஆகவே நாம் அவரது திருப்பெயர்களை உச்சரித்து வணங்குவதில் தவறில்லை. அவரது திருப்பெயர்கள் யாவும் அவரது அளவற்ற பெருமையை விவரிக்கும் போற்றுதலே யாகும். எனவே அவரைச் சாமானிய நம் போன்ற மனிதத் தன்மையைக் கொண்டு ஒப்பிடுவது ஒழுங்கல்ல. நமது நியதிகட்கும், முறைகட்கும் ஆண்டவன் அப்பாற்பட்டவன் என்ற உண்மையை உணர்ந்தால் மேற்கூறிய உன் வினா எழாது.

சென்ற வாரம் நடந்த மாதர்கள் கூட்டத்தில் ஒரு அம்மையார் பேசும்போது பெண்கள் தன் கணவன் பெயரைச் சொல்வதில் தவறில்லை, நானும் சொல்வதுண்டு. அது அவரை மரியாதைக் குறைவாக நடத்தியதாகாது என்று தெரிவித்தார்களே?

அங்ஙனம் கூறுவது உண்மையை உணராத குற்றமாகும். ஆணுக்குப் பெண் என்ன குறைவா என்ற எண்ணத்தினல் எழுந்த 'நான்' என்ற முனைப்பாகும் அது. பெரியோர்கள், சிறந்த குருமார்கள் போன்றவர்களிடம் நமக்குள்ள அன்பு, பணிவு காரணமாக அவர்கள் பெயரை அவர்கள் முன்போ, அல்லது பலர் முன்போ ஒரு சபையிலோ நாம் உச்சரிக்க அஞ்சுகின்றோமல்லவா? சிறந்த குருநாதரைப் பெயர் சொல்லி அழைக்க அஞ்சி மரியாதைக்காக எனது குருநாதர், அல்லது வேறு மரியாதையான 'பெயரிட்டுத்தானே பேசுகின்றோம். நாம் மிக்க மரியாதை செலுத்தும் பெரியோர்கள் அல்லது குருமார்களின் பெயரை மட்டும் கூற ஏன் அஞ்ச வேண்டும்?

இந்த உலகில் ஒரு பெண்ணுக்குத் தன் கணவனை விட வேறு மரியாதைச் செலுத்தப்படவேண்டிய முதன்மையானவர்கள் இல்லை. தெய்வம் தொழ மறந்தாலும் கணவனைத் தொழ மறவாதே. தெய்வந்தான் கணவன் வடிவாக வந்து உன்னை ஆட்கொள்கின்றது. இதுதான் பெண்ணுகிய உனக்குப் பிரதான கடமையாகும் என்று பெண்ணறத்தைக் குறித்துப் பேசவந்த தமிழ்மறை பேசுகின்றதே! அறிஞர் உலகம் ஒப்புக்கொண்ட அறிஞர்பெருமானுன திருவள்ளுவர் திருவாக்கு வெறும் வாக்கல்லவே.

> தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை.

என்ற இந்த உயரிய வாக்கு உண்மைத் தத்துவத்தை உள்ளவாறு உணர்த்துகின்றது.

எனவே யாவரிலும் முதன்மையாக மரியாதை செலுத்தி வணங்க வேண்டிய கணவர் பெயரைக் கூற முற்படுவது பெண்ணறம் மறந்த பிழையான செயலாகும். ஆழ்ந்து சிந்தித்துத்

தானே நம் ஆன்ஞேர்கள் கணவன் பெயரைப் பெண்கள் கூறக் கூடாது என்ற அறமுறையைக் கையாண்டு வந்தனர். அழிவு உலகத்துக்கு அழைத்துச் செல்லும் இக்கால அநாகரிக பழக்க வழக்கங்களில் சிக்கி பண்டைய அறமுறைகளைப்புறக்கணிப்பது பெண்களுக்கு அதிலும் இந்துப் பெண்களுக்கு இழுக்காகும்.

கணவர் பெயரைக் கூறுவதால் அவருக்கு ஒன்றும் குறைவு வரப்போவதில்லை. அல்லது கூருமையால் கௌரவம் உயர்ந்துவிடுவதில்லை. ஆயின் பெண்ணறம் பொய்த்துவிடும் செயலில் பெண்கள் ஈடுபடுவது நன்றல்ல. கல்வியாலும், அறிவு ஆராய்ச்சியாலும் தன்னை வளர்த்துக்கொண்டவன் பெருமை அடைகின்ருன். அன்பிஞலும் அருள் வழிபாட்டிஞலும் தன்னைப் பக்குவப்படுத்திவந்தவன் புனிதம் அடைகின்ருன். சிறந்த சாதகன் தன் கலையில் கையாண்ட சாதனையால் தனக்குச் சிறந்த சக்தியை வரப்பெற்று சகலரும் புகழ வியாபிக்கின்ருன். அதே போன்று பெண்களும் தனக்குரிய கற்பொழுக்கக் கடமைகளினல் ஒரு சிறந்த சக்தியைப் பெற்று பிரகாசிக்கின்ருர்கள். பெண்ணறத்தினல் பேணும் சக்திதான் எல்லாவற்றிலும் பெரிய மகத்தான சக்தியாகும். அதற்கு நிகரானது உலகில் வேறில்லை. இல்லையெனின் "பெய்யெனப் பெய்யு மழை" என்ற பெருஞ் சொல் வருமா? ஆகவே தங்கள் நன்மை, புகழ், சக்தி, காரணமாகவேனும் பெண்கள் கணவன் பெயரைக் கூருது இருப்பது நலமாகும்.

பெண்கள் ஆண்டவனை வழிபடும்போது அவனது பக்தியான பாடல்களில் தன் கணவன் பெயர் வந்தால் என்ன செய்வது?

நாம் சொல்லக்கூடாது என்ற ஒரு நியதியை உறுதியாகப் பின்பற்றும்போது எக்காரணத்தை முன்னிட்டும் அதை மாற்றக் கூடாது. உதாரணமாகக் "கதிர்வேல்" என்பது கணவன் பெயர். கணவனும் மனைவியும் வழிபாடு செய்யும்போது பாடுகின்ற பாடலில் "கதிர்வேலா" என்று வரும்போது வாயால் உச்சரிப்பது நன்ருகயிராது. அதுபோன்ற யிடங்களில் அப்பகுதியை உள்ளுக்குள்ளேயே கூறிக்கொள்வது நலம். இது போழ்து பல்லாயிரக்கணக்கான உத்தமப் பெண்கள் இம்முறையைப் பின்பற்றிதான் நடந்துவருகின்ருர்கள். அதுபோன்ற கற்புக்கரசிகளது அரிய தவ வொழுக்கத்தால்தான் இன்றும் நம் நாட்டில் அறப்பண்புகள் வளர்ந்து மக்கள் இன்புற்று வாழ்ந்து வருகின்றனர். மழைபொழிகிறது.

அதுவேயு மன்றி, பெண்கள் தமது கணவனுருடைய பெயரைக் கூறிஞல் தங்களுக்குத்தான் கேடு செய்துகொள்கின்ருர்கள். எங்ஙனமெனில், பொதுவாக ஆடவர்களோ மகளிரோ

பெரியவர்களுடைய பெயரைச் சொன்னல் பெரியவர்களது ஆயுள் குறைந்துபோகும் என்பது நமது பண்டையோருடைய மரபு. தங்கட்குத் தெய்வமாகவிளங்கும் கணவனர் பெயரைச் சொன்னல் கணவனருக்கு ஆயுள் குறையும். கணவனருடைய வாழ்நாள் குறைந்த பின்னர் பெண்களுக்கு வாழ்வு ஏது? மங்கலம் ஏது? 'பொற்ருலியோடு எவையும் போம்' அல்லவா? ஆகவே தங்கள் நீண்ட—இன்பமான வாழ்க்கைக்குக் கணவனருடைய வாழ்நாள் இன்றியமையாததாக இருப்பதை உணர்ந்து உன்னி அவர்தம் பெயரை வாய்விட்டுக் கூறுவது பெரும் பிழை என்பதனைத் தெளிந்து அங்ஙனம் ஒழுகிப் பெண்ணுலகம் உய்வுபெறுதல் வேண்டும்.

அம்மா! தாங்கள் தெரிவித்த உயர்ந்த கருத்துக்களை நான் உணர்ந்தேன். தங்கள் போன்ற உத்தமத் தாய் எனக்கு வாய்த்தது என் புண்ணியத்தின் பலன் என்று கருதுகிறேன். நேற்று மாலை நம் நகரில் நடந்த சமயக் கூட்டத்துக்குச் சென்றிருந்தேன். அங்கு தமிழ் நாடெல்லாம் புகழ்பெற்ற திருமுருக. கிருபானந்தவாரி ஐயா அவர்கள் மிக அழகான ஆழமான அரியதான கருத்துகளைத் தெரிவித்தார். அது சமயம் அவர் பெண்தருமத்தைக் குறித்துப் பேசுகையில் இக்காலத்தில் சில சீர்திருத்தவாதிகள் பெண்கள் கணவன் பெயரைக் கூறுவதில் பிசகில்லை என்று பிரசாரம் செய்கின்றனர்கள். அது பெண்ணுலகிற்குக் காட்டும் தீமையான வழி முறையாகும். ஆன்றோர்கள், மகான்கள் காட்டிய, பின்பற்றிய வழி முறைகளைப் பின்பற்றுவதுதான் நமது கடமையாகும். ஆகவே பெண்கள் கணவன் பெயரைக் கூற முற்படுவது கூடாது. கணவனைத் தெய்வமாகப் பாவித்து நடத்தி பெருமையடைய வேண்டும் என்று கூறினர். பெண்ணுலகம் திருந்தினுல் மண்ணுலக மக்கள் யாவரும் திருந்துவர் என்ற அவர் உத்தம உபதேசமும், தாங்கள் கூறிவந்த வாக்கும் என் மனதில் இருந்த ஐயத்தை அறவே போக்கிவிட்டது. என்று பத்மா தன் தாயார் காலில் விழுந்து வணங்கி அன்னையின் ஆசியைப் பெற்ருள்.

வாழ்க பெண்ணறம் வாழ்க மனையறம்
வாழ்க தமிழ்மறை வாழ்க வையகம்.

வேலும் மயிலுந் துணை.

அன்பே சிவம்

(M. S. தனம், தமிழ்ப்பண்டிதை, மதுரை)

"அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார். அன்பே சிவமாவ தாரு மறிகிலார்" என்று ஆன்றோர் அகமுருகுகின்றார்கள். அன்பு வடிவாய ஆண்டவன் எங்கும் என்றும் எல்லாமாய் நிறைந்துள்ளான். மலருள் மணம்போலும், மணியுள் ஒளிபோலும், நெருப்பினுள் சூடுபோலும், நீருள் தண்மை போலும் மறைந்து, வஞ்சக் கள்வனாய் ஒளிந்துகொண்டிருக்கும் இறைவன் ஒருசிலர்க்குத்தான் உருவைக் காட்டித் திருவிளையாடல் புரிகின்றான். அவன் காட்டும் வஞ்சனையும் அடியார் நெஞ்சினுள் நிறைந்த இடம் பெற்றுள்ளது.

எல்லாமாய் நிற்கும் இறைவனை எங்ஙனம் வணங்குவது? தத்தமக்குத் தோன்றும் ஏதேனும் ஓர் உருவத்தை நிலைநாட்டி, மலர் தூவி, இருகை குவித்து வணங்குவதா? ஆம். ஆண்டவனை அவ்வாறு வணங்கி வணங்கித் தன்னெஞ்சினுள்ளே நிறுத்தித் தானும் இறைவனோடு இரண்டறக் கலக்கவேண்டும்.

"பண்ணேன் உனக்கான பூசை யொருவடிவிலே
பாவித்திறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தி அப்
பனிமல ரெடுக்க மனமும்
நண்ணேன் அலாமலிரு கைதான் குவிக்கவெனின்
நாணும் என்னுளம் நிற்றி நீ
நான் கும்பிடும் போதரைக்கும் பிடாதலால்
நான்பூசை செய்யல் முறையோ"

என்று தாயுமான சுவாமிகள் முறையிடுகின்றார். இறைவன் எல்லாவற்றினுள்ளும் நிறைந்துள்ளானாதலின் இன்ன உருவத்தில் வணங்குவது என்றறியாத சுவாமிகள் ஏதோ ஒரு உருவத்தை நிலை நாட்டி வணங்க நினைக்கிறார். மட்டவிழ் மலர் கொய்து அர்ச்சிக்கச் செல்கிறார். தான் பறிக்கும் மலரில் இறைவன் உருவைக் காண்கின்றார். பின் அம்மலரைக் கொய்ய மனம் வருமா? அவ்வாறின்றி இருகைகளையும் குவித்து வணங்கலாமா என்று சிந்திக்கின்றார். உள்ளத்தில் இறைவனைக் காண்கின்றார். எனவே அவ்வாறு வணங்கவும் உள்ளம் நாணுகின்றது. இறைவன் ஆண்டான் என்பதும் உயிர்கள் அடிமையென்பதும் தத்துவம். ஆண்டவன் இயக்க உயிர்கள் இயங்குகின்றன. எனவே இறைவன் செயல் பாதியும் தன் செயல்

பாதியும் ஆக முடிவதால் தாயுமானவர் "நான் கும்பிடும்போது அரைக் கும்பிடு ஆதலால் நான் பூசை செய்யல் முறையோ" என்று முறையிடுவதின் அதி நுட்பப் பொருள் அடியார் உள்ளத்தை உருக்குந் தன்மையுடைத்தன்றோ! "வென்றுளே புலன் களைந்தார் மெய்யுணர் உள்ளந்தோறும் சென்றுளே அமுத மூற்றும்" திருவருட் பெருங்கடல்தான் சிவம். சிவமும் கருணையும் ஒன்று. கருணையே தானாக விளங்கும் சிவபெருமான் அடியார்க் கெளியன், அன்பர்க் கருளாளன், உள்ளுவார் உள்ளத்துள் உவகையமுதை யூட்டும் உலப்பிலாப் பெருங்கடல். தன் அடியார்களை ஆட்கொள்ளும்பொருட்டு உலகம் உய்யும் பொருட்டு அவன் திருவிளையாடல் பல செய்கின்றான். ஆயின் அவன் செய்வனயாவும் தீங்கற்றவை. அருள் நிறைந்தவை. அத்தகைய "அவனருளே கண்ணாகக் கொண்டு" அவனைக் கண்டு களி கூர்ந்த அருள் வள்ளலார் நம் தமிழ்நாட்டில் திகழ்ந்தனர்.

சமண் சமயம் தழைத்தோங்கி சிவநெறி அல்லலுறுங் காலத்து (கி. பி. 7-ம் நூற்றாண்டில்) திருமுனைப்பாடி நாட்டில் சைவ வேளாளர் மரபில் அவதரித்தார் அப்பர் பெருமான். இவரது இயற்பெயர் மருணீக்கியார். உலக ஆசைகளிலே மயங்கித் தவிப்பாரை அதில் நின்றும் கரையேற்றி சிவஞான மாகிய ஒளியைப் பரப்பிய அப்பெருமானுக்கு வாய்த்த இயற்பெயர் எத்துணைப் பொருத்த முடைத்து!

சமண் சமயத்தைச் சார்ந்து தருமசேனர் என்னும் பட்டங் கொண்டு சிறப்புற்று விளங்கலானார். புறச் சமயத்தைப் பற்றிய தம்பியைத் தடுத்தாட்கொள்ள வேண்டுமென்று தமக்கை திலகவதியார் வீரட்டானத் திறைவனை வேண்ட, அவ் விறைவன் "நாம் அவனைச் சூலை நோயால் தடுட்தாட்கொள்ளுவோம்" என்று கனவில் தோன்றி அறைந்து மறைந்தருளினார். அங்ஙனமே அப்பர் சுவாமிகளைச் சூலை நோயானது "குடரோடு துடக்கி முடக்கியிடவே" அவர் ஆற்றேன் அடியேன் என்று அறைகூவி யழுதார். அன்புமயமான ஆண்டவன் அடியவன் முன்தோன்றி நோய் நீங்கச் செய்து, "எம்மை இனிய செந்தமிழ்ப் பாக்களால் பாடிய நீ திருநாவுக்கரசர் என்ற பெயரால் திகழ்வாய்" என்று திருவாய் மலர்ந்தருளி கரந்தார். அன்று முதல் திருநாவுக்கரசர் பலதிவ்ய ஸ்தலங்களுக்குச் சென்று சிவபெருமான்மீது திருப்பதிகம் பல பாடினார். சமணர் தீங்கிழைத்

தனர். நீற்றறையிலிட்டனர். நஞ்சு கலந்த பாலூட்டினர். நஞ்சும் அமுதாயிற்று. "நஞ்சு அமுதாக்குவித்தார் நனிபள்ளி யடிகளாரே'' என்று அவர் பாடுமாற்றாலறியலாம். யானைக் காலால் இடறச் செய்தனர். யானையும் வலம் வந்து பணிந்தது. கல்லிற் கட்டிக் கடலிற் பாய்ச்சினர். "நற்றுணையாவது நமச் சிவாயவே'' என்று கரை சேர்ந்தார். எத்துணை அல்லல்கள்! ஒன்றிலும் நீங்குருது சிவஞானம் பொலிவதைக் கண்ட மகேந்திர பல்லவன் தாழ்ந்து பணிந்து திருநீறணிந்து சைவனு ஞன்.

பின் நாவுக்கரசர் பலபதிகள் சென்று பரமனைப் பாடினர். காளத்தி சென்று அம்மலைக் கொழுந்தை இறைஞ்சினர். கயிலை நாதனைக் காணக் காதல் கொண்டார். கங்கைக் கரையை யடைந்தார். மனிதர் புகமுடியாதவாறு அடர்ந்திருந்த காட்டு வழியே சென்றார். பாம்பு முதலிய கொடிய மிருகங்கள் அப் புனிதரைத் துன்புறுத்தாது வழிபட்டுச் செல்வது போன்று ஒதுங்கி ஊர்ந்தன. நடந்து நடந்து சென்றார்; கால்கள் தேய்ந் தன; கால்கள் பரட்டளவும் தேயச் சென்றார். பின்னும் நடக்க இயலாராய் மார்பினல் ஊர்ந்து சென்றார் — அங்கமெலாம் தேயச் சென்றார். இறுதியில் சிந்தையைச் சிவன்பால் செலுத்தி செயலற்றுக் கிடந்தார். பெருமானின் திண்ணிய உறுதியைக் கருணைக் கடல் இன்னும் சோதிக்க மனமற்றவராய்ப் பக்கலிலே ஓர் குளம் தோற்றுவித்து அதன் மருங்கே ஓர் முனிவர் வேடந் தாங்கி வந்தார். இன்னும் சிலகாலம் தீந்தமிழ்ப்பாடி வழுத்த எண்ணங்கொண்ட இறைவன் நாவுக்கரசரை யணுகி "உறுப் பெல்லாம் நைந்து வருந்திட இங்கு எய்தியதென்னை'' என்று வினவ, அடியார் "வண்டுலாங் குழல் மலைமகளுடன் வடகயிலை யண்டர் நாயகரிருக்கும் அப்பரிசைக் கண்டு கும்பிட விருப் பொடுங் காதலின் அடைந்தேன் அடியேன்'' என்றார். முனிவரோ "கயிலைப் பெருமான் காசினியோர் காண்பதற்கு அரியன்'. என விளம்ப, தமிழரசர், "ஆளுநாயகன் கயிலையி லிருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்'' என மறுத்தார். உடனே அருள் அளாவிய அண்ணல் விசும் பிடைக் கரந்து "ஓங்கு நாவினுக்கரசே எழுந்திரு'' எனவும் அப் பெருமான் அழகுடல் பெற்றார். "அண்ணலே எனையாண்டு கொண்டருளிய அமுதே விண்ணிலே மறைந்தருள்புரி வேத நாயகனே, கண்ணினல் திருக்கயிலையிலிருந்த நின் கோலம்,

நண்ணி நான் தொழ நயந்தருள் புரி" என்று இறைஞ்சிய தொண்டரை நோக்கி ஆண்டவன் "நீ இப் பொய் கையில் மூழ்கித் திருவையாற்றில் எம் கயிலைக் காட்சியைக் காண்பாய்" எனத் திருவாய் மலர்ந்தருளி விண்ணிலே மறைந் தார். அவ்வாறே வாகீசர் திருவையாற்றில் கயிலைக் காட்சி யைக் கண்டு களிகூர்ந்தார். "யாதுஞ்சுவடுபடாமல் ஐயாறடை கின்றபோது காதல் மடப்பிடியோடுங் களிறு வருவனகண்டேன் கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்" என்று ஆனந்தக் கூத்தாடினர். திருப்பூம்புகலூரிலே இறைவனோடு இரண்டறக் கலந்தார்.

அன்பு சிவத்தோடு ஒன்றியது. அன்புச் சுடர் எங்கும் பரவியது. அன்பால் ஆண்டவனை யடையலாம். "அன்பு ஒன்றே ஆண்டவனைக் காட்டும் வழி" சூரியனும் ஒளியும் வேறுகாதவாறு போல அன்பும் இறைவனும் வேறுகார். சிவம் என்ற பதத்தின் பொருள் 'அன்பு' என்பது. சிவநெறி அன்பு நெறியாகும். சைவமதம் அன்பு வழியையே வலியுறுத்துகின் றது. "தன்னைப்போல் பிறரை நேசி," "எல்லா உயிர்களிடத் தும் அன்பாயிரு" என்ற அறிவுரைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். அன்பின் அடிப்படையிலேயே உலகம் இயங்கு கின்றது.

"அன்பின் வழியது யிர்நிலை அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த வுடம்பு" — திருக்குறள்.

'ஒளிவிடுக உன்னத அன்பு'

அறமொழிகள்

56 மனைவி மக்களுடனிருந்து வாழ்வதற்கு மட்டும் இல் லறம் அல்ல. இல்லாதவர்க்கு இயன்றதை உதவி வாழ்வதற் காகவே "இல்லறம்" என்ற பெயர் கண்டனர் ஆன்றோர்கள்.

⁂ ⁂ ⁂ ⁂ ⁂

57 இல்லறம் ஒரு சிறந்த பயிற்சி நிலையம். இன்பமும், துன்பமும் தினம் மாறி மாறி மோதுவதால் மக்களின் மனம் வாழ்க்கையில் விரக்தி அநுபவத்தைப் பெற முடிகின்றது.